**MCOP. 150/2022 and 152/2022**

**நாள்.07.04.2026.**

**எ.ம.சா. 1 – வித்யாதரன்**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

கார்த்திக் என்பவருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது Insufficient Address என திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். கார்த்திக் என்பவருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது சார்வு செய்யப்பட்டிருந்தால் அவரது ஓட்டுநருக்குரிய ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பித்திருப்பார் என்றும், சார்வு செய்யப்படவில்லை என்பதால்தான் இயலவில்லை என்றும் சொன்னால், ஓட்டுநருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. அறிவிப்பில் 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதற்கு ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் Tracking Status தாக்கல் செய்துள்ளோம். சார்வு செய்யப்பட்டது என்பதற்கு ஒப்புதல் அட்டை திரும்பி வருவதற்கு முன்பாகவே அறிவிப்பின் நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு எங்கள் காப்பீடு நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.